# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணையதளம் www.tnsec@tn.nic.in

---

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 8 /2011** **நாள். 22 .09.2011**

தமிழ்நாட்டில், உள்ளாட்சித் தேர்தல்கள் 17.10.2011 மற்றும் 19.10.2011 ஆகிய நாட்களில் இருகட்டங்களாக நடைபெறவுள்ளது. இது தொடர்பாக அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்களால் வேட்பு மனுக்கள் பெறப்படுகின்றன.

உள்ளாட்சித் தேர்தல்கள் சுமூகமாகவும், நியாயமாகவும் நடைபெறுவதோடு வாக்காளர்கள் அச்சமின்றி சுதந்திரமாக வாக்களிக்க மாநிலத் தேர்தல் ஆணையம் அனைத்து வித நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் இந்த தேர்தல் நன்னடத்தை விதி முறைகள் முறையாக, முழுமையாக செயல்படுத்துவது தொடர்பாக, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசனை செய்து அக்கட்சிகளின் கருத்துக்களை பெற மாநிலத் தேர்தல் ஆணையம் விரும்புகிறது.

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன் 27.09.2011 அன்று மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகத்தில் ஆலோசனைக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு தேர்தல் சிறப்பாக நடத்திட தங்களது ஆலோசனைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்